உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

அனுப்புநர்
திரு. கராசூரராமன் இ.ஆ.ப.,
ஆணையாளர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு துறை.
சேப்பாக்கம், சென்னை-5

பெறுநர்
1. துணை ஆணையாளர் (நகரம்)வடக்கு/தெற்கு.
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை.
சேப்பாக்கம், சென்னை -600 005.
2. அனைத்து மாவட்ட விநியோக அலுவலர்கள்.

ந.க.எண்:இ4/8920/2009, நாள் 20.5.2009

அய்யா,

பொருள்: பொது விநியோக திட்டம் - குடும்ப அட்டைகள் - காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் அவர்களது பெயர்களை பெற்றோர் குடும்ப அட்டைகளிலிருந்து நீக்குவது - அறிவுரைகள் - வழங்கப்படுகின்றன.

********

காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் அவர்களுக்கு புதிய குடும்ப அட்டை பெறுவதற்கு ஏதுவாக அவர்களது பெயர்களை அவர்களது பெற்றோர் குடும்ப அட்டைகளிலிருந்து நீக்க கோரும்போது சில பெற்றோர்கள் அவர்களது குடும்ப அட்டைகளை தர மறுக்கின்றனர் என தெரிவித்து தங்களது பெயர்களை தங்களது பெற்றோர்கள் குடும்ப அட்டைகளிலிருந்து நீக்கி உரிய சான்றிதழ் வழங்க கோரி இத்துறைக்கு கோரிக்கைகள் தந்துள்ளனர். இந்த கோரிக்கைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் ஆண்களாக இருப்பின் 21 வயது பூர்த்தி அடைந்தவர்களாகவும் பெண்களாக இருப்பின் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருப்பின் அவர்கள் அவர்களது பெயர்களை அவர்களது பெற்றோர் குடும்ப அட்டையிலிருந்து நீக்கம் செய்ய கோரி மனு செய்யலாம். குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை நீக்கி சான்றிதழ் பெற குடும்ப தலைவர் மனு செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளிலிருந்து இந்த இனத்திற்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.
2. இவ்வாறு அளிக்கப்படும் மனுக்களுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.
(அ) வயது வரம்பு மற்றும் விண்ணப்பதாரரின் பெற்றோர் பெயர்களை இரண்டும் நிரூபிப்பதற்கான பிறப்பு சான்றிதழ் நகல் அல்லது கல்விச்சான்று.
(ஆ). பெற்றோர் குடும்ப அட்டை நகல் அல்லது குடும்ப அட்டை எண் அல்லது குறியீடு எண் பெற்றோர் பெயர், குடும்ப அட்டையில் உள்ள முகவரி தற்போது பெற்றோர்கள் குடியிருக்கும் முகவரி.
திருமண பதிவு சான்றிதழ் நகல்.
3. இவ்வாறு பெறப்படும் மனுக்களின் மீது நீக்கல் சான்றிதழ் கோரும் மனுக்களுக்குரிய காலக்கெடுவுக்குள் வட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையாளர் நீக்கல் சான்றிதழ் வழங்க வேண்டும்.
4. குடும்ப அட்டை இல்லாமல் இத்தகைய இனங்களில் சிறப்பினமாக நீக்கல் சான்றிதழ்கள் வழங்கப்படுவதால் பெயர் நீக்கப்பட்டதற்கான பதிவுகளை குடும்ப அட்டைகள் தகவல் கணினி பதிவில் ( Family card database ) பெயரை நீக்கம் செய்வதுடன் யூனிட் / நபர் குறைக்கப்பட்ட விவரத்தை அலுவலக மற்றும் அங்காடி "அ" மற்றும் வழங்கல் பதிவேட்டில் பதிவுகள் செய்ய வேண்டும். மேலும் இவ்வாறு பெயர் நீக்கம் செய்யப்பட்டு வழங்கப்படும் ஆணையின் நகல் குடும்ப தலைவருக்கு தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும்.
5. இந்த அறிவுரைகள் உடன் அமுலுக்கு வருகின்றன. இக்கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை மறு அஞ்சலில் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்)- கராசூராமன்,
ஆணையாளர்.

நகல்
1. அரசு செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை. சென்னை - 600 009.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
சென்னை - 600 010.
3. நிர்வாக இயக்குனர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்,
சென்னை - 600 010.
4. அனைத்து உதவி ஆணையாளர்கள்.
5. அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள்.
6. ஆணையாளர் அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவுகள்.
7. இருப்புக் கோப்பு

-ஆணைப்படி அனுப்புதல்-

கண்காணிப்பாளர்.